**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 185/2022**

**Deposition of witness for prosecution : PW 6 (LW 9 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **கோதண்டராமன்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 09.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது முதலியார்தோப்பில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அ.சா.1 வீட்டின் அருகில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அப்போது அங்கு நானும், பக்கத்து வீட்டு பையனும் நின்று கொண்டிருந்தோம். போலீசார் தயார் செய்த பார்வை மகசரில் நானும், பக்கத்து வீட்டு பையன் பெயர் தெரியவில்லை அவரும் நானும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ. 2** ஆகும். சம்பவம் சம்மந்தமாக காவல் துறையின் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை - இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 185/2022**

**Deposition of witness for prosecution : PW 5 (LW 7 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **கார்த்தி** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 09.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேத்தாக்குடி தெற்கு பூசாரிக்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்,. கடந்த 27.11.2020 ம் தேதி காலை 8,30 மணியளவில் எங்கள் பக்கத்து ஊரைச்சேர்ந்த அன்பழகன் என்பவர் குமாரவேலன் என்பவரை வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவத்தின்போது குமரவேலனின் இடது கையில் ஆட்காட்டி விரலுக்கும், நடுவிரலுக்கும் நடுவே அன்பழகன் குமரவேலனை வெட்டி விட்டதாகவும், குமரவேலன் வலது கையை அன்பழகன் கடித்து விட்டதாகவும் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். காயம்பட்ட குமரவேலனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டார்கள். நான் மேற்படி நபரை மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். சம்பவம் சம்மந்தமாக காவல் துறையின் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை - இல்லை**